நிருவாக அலுவலர் பதவியில் 27.10.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்வதற்கு 1954–ஆம் ஆண்டைய ஒழுங்குமுறைகளில் ஒழுங்குமுறை 16(பி)யின் பிற்பகுதியின்படி தேர்வாணையத்தின் இசைவினை பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திடம் மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் கோரப்பட்டது.

4. திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில் கிராம நிருவாக அலுவலராகப் பணிபுரியும் போது 22.02.2007 அன்று காலமான திரு.M.அண்ணாமலை என்பவரின் மகன் திரு.அ.லோகேந்திரபாபு அவர்கள் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வருவாய் துறையில், திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில் பணியமர்த்தப்பட்ட நாளான 27.10.2014 முற்பகல் முதல் கிராம நிருவாக அலுவலர் பதவியில் அவரது பணி வரன்முறைப்படுத்தப்பட ஏதுவாக தேர்வாணையம் தனது இசைவினை அளிக்கிறது என தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

5. மாவட்ட ஆட்சியரின் அறிக்கை மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை ஆகியவற்றை அரசு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கருத்துடன் ஆய்வு செய்து, திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் கிராம நிருவாக அலுவலராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.அ.லோகேந்திரபாபு என்பவரை கிராம நிருவாக அலுவலர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 27.10.2014 முற்பகல் முதல் தனியரின் பணியினை வரன்முறைப்படுத்த அரசு ஆணையிடுகிறது.

6. திரு.அ.லோகேந்திரபாபு என்பவர் கிராம நிருவாக அலுவலர் பதவிக்குரிய உடல் தகுதியைப் பெற்றிருக்கிறார் என்பதை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் உறுதி செய்து மேற்குறித்த ஆணையை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா. எண்.19792/க்யூ–2/2015–1, நாள்11.09.2015–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.வெங்கடேசன்
அரசு செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர்.
திரு.அ.லோகேந்திரபாபு, கிராம நிருவாக அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.
(திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மூலமாக)
செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
பிரேசர் பாலச்சாலை, சென்னை –3.

நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.
மாநில கணக்காயர்(RAO), தலைமைச் செயலகம், சென்னை–9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
8/12/15

Rc. No. A5/4792/2012 dt: 02.2016
Forwarded to Individual

9/2/16
Personal Assistant to Collector (General)
Tiruvallur District, Tiruvallur

To
1. Thiru. A. Logendira Babu
2. Taluk office, Tiruttani

33498/A1/dt.15.12.15

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருவள்ளூர் மாவட்டம் – திரு.அ.லோகேந்திரபாபு த/பெ காலஞ்சென்ற திரு.M.அண்ணாமலை – கருணை அடிப்படையில் கிராம நிருவாக அலுவலராக பணிநியமனம் – பணியை வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [பணி–9(1)] துறை

அரசாணை (3டி) எண்: 305 நாள்:30.11.2015

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 14 DEC 2015 திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர்

A1

படிக்கவும்:

1. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் கடித எண்.அ5/4792,/2012, நாள்.05.02.2015.
2. கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ஆகு2/8440/2015, நாள் 04.05.2015
3. அரசு கடித எண்.21143/பணி–9(1)/2015–2, வருவாய்த் துறை, நாள்.21.09.2015.
4. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடித எண். 7415/சி.டி.பி2/2015, நாள் 04.11.2015.

***********

ஆணை:

திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில், கிராம நிருவாக அலுவலராகப் பணியாற்றியபோது 22.02.2007 அன்று காலமான திரு.M.அண்ணாமலை என்பவரின் மகன் திரு.அ.லோகேந்திரபாபு என்பவர் கருணை அடிப்படையில், பணி நியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் கிராம நிருவாக அலுவலராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால் திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக கிராம நிருவாக அலுவலராக நியமனம் செய்யப்பட்டு, தனியர் 27.10.2014 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திரு.அ.லோகேந்திரபாபு என்பவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் 27.10.2014 முற்பகல் முதல் கிராம நிருவாக அலுவலர் பதவியில் முறையாக வரன்முறை செய்ய ஆணை வேண்டி திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் முன்மொழிவு அனுப்பியிருந்தார்.

2. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் ஏற்று மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. காலஞ்சென்ற கிராம நிருவாக அலுவலர் திரு.M.அண்ணாமலை என்பவரின் மகன் திரு.அ.லோகேந்திரபாபு கருணை அடிப்படையில் கிராம நிருவாக அலுவலராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளும் பெற்றுள்ளதாலும் கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் வருவதாலும், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.அ.லோகேந்திரபாபு என்பவரது பணியை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகில் கிராம